www.padippakam.com

# அகதியான போது ..................



------------------------------------------------------------------------------ரஹீம்ராஜி

**------(சமூக துரோகிகளை,அரசியல் வாதிகளின் உண்மை தோற்றத்தை அம்பலப்படுத்தும் புதிய தொடர் )----(This will be updated every Friday night)**
**பாகம் 8**

வேலை இல்லாத பிரச்சினை பற்றி விலாவாரியாக அம்மையாருக்கு எடுத்துச்சொன்னேன்.விண்ணப்பம்ஒன்றை தந்துவிட்டு போகுமாறு மிக இலகுவாக கூறினார்.

இப்படி எத்தனையோ விண்ணப்பங்களை தலைவருக்கும்,இல்யாசுக்கும் கொடுத்து விட்டேன் என்று புலம்பினேன்.

'தம்பி இப்ப காபர்ல புல். வேலை இல்லை' என்றார்

'அப்ப எதுக்காக விண்ணப்பத்தை கேட்டீர்கள்' என்றவாறு எனது கருத்தை தொடர்ந்தேன்.

'நான் எத்தனையோ அப்ளிகேசன் போட்டு விட்டேன்.எனக்கு பிறகு போட்ட பலருக்கு வேலை கிடைத்திருக்குறதே' என்றேன்.

'இல்லை நீங்கள் இல்யாஸ் எம்..பீயை சந்தியுங்கள்' என்றார் என்னை காய் வெட்டியவாறு..

எனது குடும்ப நிலையை எடுத்துச்சொன்னேன்.

'காபர்ல வேலை செய்றவங்களை கடல்ல தள்ளிப்போட்டு விட்டா உங்களுக்கு வேலை தர்றது' கடுப்பாகினார் தலைவரின் துணைவியார்

படிப்பகம்

www.padippakam.com

'ஒரு யாழ்ப்பாணத்தானை எம்.பீயா தெரிவு செய்யாமல் புத்தளத்தானை தெரிவு செய்தது நாங்கள் விட்ட முதல் பிழை.முஸ்லீம் காங்கிரசுக்கு ஆரம்பம் தொட்டு வோட்டு போட்டது அடுத்த பிழை' என்று நானும் பொறுமையைக்கடந்து கோபத்தைக்கொட்டினேன்.

'பத்தாயிரம் பேர் வோட்டு போட்டால் பத்தாயிரம் பேருக்கும் வேலை கொடுக்க முடியாது.இல்யாஸ் என்ன செய்வார். தன்னாலானதை செய்கிறார்' குமுறினார் அவர்.

'பத்தாயிரம் பேர் வோட்டுப்போட்டால் பத்தாயிரம் பேரும் படித்தவனாக இருக்க மாட்டார்கள்.கஷ்டப்பட்டவனாகவும் இருக்க மாட்டார்கள்.இல்யாஸ் யாழ்ப்பாண முஸ்லீம்களுக்காக எதுவுமே செய்யவில்லை' என்றேன்

'அவர் நிறைய யாழ்ப்பாண முஸ்லீம்களுக்கு செய்து இருக்கிறார்' இல்யாஸின் சொந்த குடும்பத்தை சமூகமாக நினைத்த அந்த அம்மையாரின் அறிவையும் விவாதம் என்று நினைந்துக்கொண்டு முழு பூசணிக்காயை மூக்குக்குள் நுழைக்கப்பார்க்கும் விவாத திறனையும் எப்படி பேசுவது?

'யாழ்ப்பாணத்தை விட்டு வந்த போது புலிகள் சொல்லி அனுப்பியது அஷ்ரப்பிடம் போங்க எல்லாம் தருவார் என்று .நீங்கள் எங்களுக்குகாக எதையுமே செய்யவில்லை .நாங்கள் வெளியேற்றப்பட்டமைக்கு நீங்களும் ஒரு காரணம்.'என்று என்னையும் மறந்து கத்தினேன்.

'உங்களது வெளியேற்றத்துக்கும் எங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை 'என்பது அவரது பதில்.

'உங்களை நம்பி எந்த பிரயோசனமும் இல்லை.இனி உங்களை நம்பப்போவதும் இல்லை.இனி உங்கள் இடத்தில் எனக்கு வேலையும் தேவையில்லை.'என்று எழும்பியபோது..

'வேண்டுமென்றால் இன்னொரு விண்ணப்பத்தை தந்து விட்டு போகலாம்' என்றார்.அவரது கருத்தில் இருந்து வேண்டா வெறுப்பு தெரிந்தது..

'வேண்டாம்.இறைவனிடம் எனது காரியத்தை விடுகிறேன்' என்று அங்கிருந்து வெளியேறினேன்.

படிப்பகம்

www.padippakam.com

இது நடந்தது எனக்கு மட்டுமல்ல .என்னைப்போன்ற ஒரு இலட்சம் இலஞ்சம் கொடுக்க

வசதியற்ற பல யாழ்ப்பாண முஸ்லீம் இளைஞர்களுக்கும் நடந்தது இதே கதிதான்.

தலைவரின் பாரியாருடன் வாதாடிவிட்டு வெளியே வந்த போது ஒரு சில வருடங்களுக்கு முன்னர் நடந்த விடயம் ஒன்று ஞாபகம் வந்தபோது எனக்குள்ளேயே சிரித்துக்கொண்டேன். அலுஞ்சிப்போத்தானை என்ற பொலநறுவை கிராமத்தில் படுகொலை நடத்தப்பட்டதை எதிர்த்து நாடு முழுவதும் ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு முஸ்லீம் காங்கிரஸ் கேட்டுக்கொண்ட வெள்ளிக்கிழமை அது. அப்போது நான் படித்துக்கொண்டிருந்தது ஐக்கிய தேசிய கட்சியின் செல்வாக்கு புரையோடிப்போயிருந்த தர்கா நகர் ஸாகிரா கல்லூரியில்..ஹர்த்தாலை அனுஷ்டிக்க .. நானும் சில இளைஞர்களும் முன் நின்று இரவு இரவாக கருப்பு கொடிகள் வீதி வீதியாக கட்டியதற்காகவும்,மாணவர்களுக்கு கருப்பு கொடிகள் விநியோகித்மைக்காகவும் கல்லூரி நிர்வாகத்தால் முஸ்லீம் காங்கிரசுக்கு ஆதரவாக செயற்படுவதாக குற்றம் சாட்டப்பட்டு பாடசாலையை விட்டு வெளியேற்றப்படாத குறையாக கண்டிக்கப்பட்டிருந்தேன். முஸ்லீம் காங்கிரஸ் ஆதரவாளன் என்று பெயர் சூட்டப்படிருந்தேன்.அதற்கெல்லாம் கிடைத்த பரிசுதான் இது என்று சிரித்துக்கொண்டேன்.
((தொடரும் )

படிப்பகம்